முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1082

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.09.2022, வியாழக்கிழமை

1. ஓமென்ற மூலத்தின் மகா சூட்சுமமே
ஓமென்ற சக்தியாக உலகை வெல்ல வந்த
ஓங்கார ஞானியரின் என் அவதாரமே
ஓதிடுவேன் அரங்கனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி தன்னை
உரைத்திடுவேன் சுபகிருது வேங்கை திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 30 நாள், 15.09.2022 வியாழக்கிழமை)
ஞானமாம் அரங்கன் சன்மார்க்கமே ஞானலோகம் படைத்து காத்தருளும்
ஞானமாம் அரங்கன் தர்ம வழிகளே நாலாதிக்கும் பெருகி உலகோர் பசிபிணி விரட்டி
3. விரட்டியே உலகை தர்மலோகம் ஆக்கும்
விரைந்து உலகோர்களை எல்லாம் தர்மவான்களாக்கி
ஆக்கியே கலியுகத்தை மாற்றி அழிவு பேரிடர் துன்பமில்லாத
ஆக்கமான ஞானலோகமாக்கி இனிதே அனைவருக்கும் அழியாமை தந்தருளும்
4. அருளுகின்ற உயர் மார்க்கத்தை அரங்கன் வழி
ஆறுமுகன் யானே உள்ளிருந்து நடத்துவதாலே
பிறழாது பிறவழி அலட்சியம் கொள்ளாது
மக்களெல்லாம் அரங்கன் குடில் நாடி
5. நாடியே குருவென சரணாகதி தன்னை
குறையிலா முழுமைபட பெற்றுக்கொண்டு
திருவருள் வேண்டி தொடர் பூஜை செய்து
தேசிகன் வழி தொடர் தர்மம் தொடரதொடர
6. தொடரவே உலகில் சடுதி மாற்றம்
தூய ஞானிகள் வெளிப்பாடு மிகுந்து
இடரின்றி ஞான ஆட்சி மலரும்
ஏழாம்படைவீட்டில் இருந்தே இந்த அற்புதம் நிகழும்
7. நிகழவே அரங்கன் குடில் நோக்கி வாரீர்
நிலவுலகம் மாற அரங்கன் திருவடி பற்றி
காலனை வென்று உலகோரெல்லாம்
கலியில் அழியாமை பெற்றுவாழ அரங்கன் வழிவழி தொடர்ந்து வாரீர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–